# 2 இறைச் சிந்தனை

சமயம் என்பது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நெறிக்கூடாக மனிதனைச் சிறந்த வாழ்க்கை முறைக்கு வழிப்படுத்துதல் எனலாம். சமய வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைவதற்கு அதுகூறும் நல்ல விடயங்களை முறைப்படி பின்பற்றுதல் அவசியமாகின்றது. சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் இறைநம்பிக்கை என்பது ஆன்மீகத்தை வலுப்படுத்தவும் ஒழுகலாறுகளை நெறிப்படுத்தவும் பெரிதும் உதவுகின்றது.

நாம் எமது அன்றாடக் கருமங்களை இறைசிந்தனையுடன் ஆற்றுவது மிகுந்த பயனைத் தருவதாகும். எமது சமய நூல்களும் ஆன்றோர்களின் வாழ்க்கை முறைகளும் இறைசெயலின் தார்மீகத்தை எடுத்துக் கூறுகின்றன. சமய குரவர்கள் நால்வரும் ஏனைய அனுபூதிச் செல்வர்களும் இறையின்பத்தை அனுபவித்து அதன்வழி வாழும் முறைமையை எமக்கு உணர்த்தியுள்ளனர். இவ்வாறு இறைசிந்தனையுடன் வாழ்வியற் கருமங்களை ஆற்றுவதற்கு பின்வரும் இடங்கள் பொருத்தமாக உள்ளன.

1. வீடு
2. ஆலயம்
3. பாடசாலை

இவை ஒவ்வொன்றும் சைவசமயி ஒருவனை இறைசிந்தனைக்கு உட்படுத்தி செயற்படுத்த எவ்வாறு உதவுகின்றன என்பதே இவ்வத்தியாயத்தின் பிரதான நோக்கமாகும். வீடு எமது மரபுவழி பழக்க வழக்கங்களை விழுமியப்படுத்துவதாகவும் கோயில், பாடசாலை என்பன சமூக வழிமரபுகளை ஒரு கூட்டுமுயற்சியாக நெறிப்படுத்துவதாகவும் அமைகின்றன.

## (அ). வீட்டில் சைவம்

இந்துப் பாரம்பரியத்தில் மனிதனின் பிறப்பிலும், இறப்பிலும், அதன் பின்னருமெல்லாம் சடங்குகள் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றை வடமொழியில் 'சம்ஸ்காரம்' என்பர். இக்கருமங்கள் யாவும் சமய வழிப்பட்டனவாகவும் இறைசிந்தனையைக் கொண்டனவாகவும் அமைகின்றன. இத்தகைய சமயரீதியான கருமங்கள் வீட்டில் நாளாந்தம் நடைபெறுவனவாகவும் விசேடகாலங்களில் பின்பற்றப்படுவனவாகவும் உள்ளன.

அதிகாலையில் நித்திரைவிட்டு எழுவது தொடக்கம் எமது நாளாந்தக் கடமைகள் யாவும் இறைசிந்தனையைக் கொண்டனவாகவே அமைந்திருக்கின்றன. சிவமந்திரத்தை உச்சரித்தல் முதற் கடமையாகும். மேலும் சூரிய நமஸ்காரம் செய்தல், வீட்டைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்தல், மஞ்சள் நீர் தெளித்தல், சாணம் கலந்த நீரைப் பயன்படுத்தி வீட்டையும் சுற்றாடலையும் புனிதப்படுத்தல் வேண்டும்.

நீராடிய பின்னர் சுவாமி அறையிலுள்ள தெய்வத்திருவுருவப் படங்களுக்குப் பூவும் நீரும் வைத்து தூபமும் தீபமும் காட்டி வணங்குதல் வேண்டும். தோத்திரப்பாடல்களைப் பாடி இறையருளை வேண்டுகின்றோம். அதன் பின்னர் விபூதியை சிவசிவ என்று கூறிக்கொண்டு நெற்றியில் தாரணம் செய்கின்றோம். விபூதியை அணியும் முறைகள், நேரங்கள், இடங்கள் என்பன பற்றி சமய நூல்களில் விளக்கப்பட்டுள்ளன.

அன்றாடம் வீடுகளில் சமயக்கடமைகளை நாம் ஆற்றும் பொழுது பல்வேறு மனித விழுமியங்கள் பேணப்படுகின்றன. இறைபக்தி, ஜீவகாருண்யம், பிறருக்கு உதவுதல், பெரியோரை மதித்தல் போன்ற பண்பாடுகள் மெருகூட்டப்படுகின்றன. 'விருந்தோம்பல்' என்ற பண்பாடு மிகவும் முக்கியமானது. இதன் மூலம் மனித உறவுகள் பலப்படுவதோடு நலிந்தோரைப்பேணுதல், பிராணிகளுக்கு மதிப்பளித்தல், சமூக ஒற்றுமை ஆகிய அறங்களும் காக்கப்படுகின்றன. இவற்றுடன்,

1. நந்தவனம் அமைத்தல்
2. துளசிமாடம் அமைத்தல்
3. சந்தியாவந்தனம் செய்தல்

ஆகியனவும் எமது நாளாந்தக்கடமைகளில் இடம்பெறும். இத்தகைய புண்ணிய செயல்கள் இறைசிந்தனையை வளர்க்கவும் எமது இலட்சிய வாழ்வை அடையவும் உதவுகின்றன. எமது வாழ்வில் உணவு உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அதனை முறைப்படி உண்ணுவதும் சமயப்பழக்கமாகும். அந்த உணவை எமக்குத்தந்த இறைவனுக்கு நன்றி செலுத்தல் வேண்டும் ''அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்'' என அப்பர் சுவாமிகளுடைய தேவாரத்தைப் பாடிய பின்னரே எமது மூதாதையர் உணவினை உண்டனர். அதனை நாமும் கடைப்பிடிக்க வேண்டும்.

மாலை ஆனதும் கைகால் முகம் கழுவி விளக்கேற்றி கடவுளைக் கும்பிட்டுத் தோத்திரம் பாடி வழிபாடு செய்வது அவசியமாகும். வெள்ளிக்கிழமை போன்ற புனித நாட்களில் சுவாமி அறையில் ஒன்று கூடி வீட்டில் உள்ள எல்லோரும் 'கூட்டுப் பிரார்த்தனை' செய்வதும் சிறந்த சமயப்பழக்கமாகும். அத்துடன் நித்திரைக்குச் செல்லுவதற்கு முன்னர் திருநீறு அணிதல், கடவுளை நினைத்தல், நாளாந்தத் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டல் என்பனவும் முக்கியமாகும்.

இந்துக்களின் சமய வாழ்வின் புண்ணிய காலங்கள் எனப்படும் விசேட நாட்களும் முக்கியமானவை. சமயம், சமூகம் சார்ந்த எமது பண்பாட்டைப் பிரதிபலிக்கின்ற நிகழ்வுகள் இக்காலங்களில் முக்கியம் பெறுகின்றன.

1. விரதங்கள்
2. சடங்குகள்
3. பண்டிகைகள்

என்பன இறைசிந்தனையுடன் ஆற்றப்படுகின்ற 'விழாக்கள்' ஆகும். சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருவாதிரை, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, பிரதோஷம், விநாயகசதுர்த்தி போன்ற விரதங்களும் தைப்பொங்கல், தீபாவளி,

புதுவருடப்பிறப்பு, கார்த்திகை விளக்கீடு போன்ற பண்டிகைகளும் முக்கியமானவை.

பண்டிகைக் காலங்களில் நாம் எமது வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் தூய்மை செய்தல் கடவுளை எமது அருட்பார்வைக்கு உட்படுத்தும் முதல் நடவடிக்கை எனலாம். தூய்மையான ஒரு இடத்தில்தான் கடவுளின் 'சானித்தியம்' உண்டாகின்றது. மேலும் இக்காலங்களில் மருத்து நீர்வைத்து முழுகுதல், எண்ணெய் தேய்த்து முழுகுதல் முதலிய நடைமுறைகள் முக்கியம் பெறுகின்றன. புதிய ஆடை அணிந்து,

1. மாக்கோலம் இடுதல் 2. மாவிலைத் தோரணம் கட்டுதல்
3. நிறைகுடம் வைத்தல் 3. இறைவனுக்கு உணவு படைத்தல்

ஆகிய காரியங்கள் செய்யப்படுகின்றன. இவற்றைவிட வாழ்வியற் சடங்குகள் எனப்படும் பூர்வக்கிரியை - அபரக்கிரியை என்பனவும் முக்கியமானவை. இவை ஆன்மாவின் மனச்சாந்திக்காகவும் இல்லறத்தாரின் கடமை என்ற நிலையிலும் ஆற்றப்படுகின்றன. பூர்வச்சடங்குகளில்,

1.ஏடு தொடங்குதல் 2.திருமணச்சடங்கு
3.உபநயனச்சடங்கு 4.புதுமனை புகுதல்

முதலியன முக்கியம் பெறுகின்றன.

## (ஆ). பாடசாலையில் சைவம்

வீடுகளில் எமது மரபு வழியான பண்பாடுகளை வளர்த்துக் கொள்வது போலவே அவற்றை ஒரு சமூக மயப்படுத்தும் களமாகப் பாடசாலைகள் திகழ்கின்றன. பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் பல்வேறு நிகழ்வுகள் ஆன்மீக நெறிப்பட்டனவாகவும் இறை சிந்தனையை வளர்ப்பனவாகவும் அமைகின்றன.

பாடசாலைகள் காலைப் பிரார்த்தனைகளோடு ஆரம்பமாகின்றன. பெரும்பாலான பாடசாலைகளில் கோயிலோ அன்றி சரஸ்வதி சிலையோ காணப்படுகின்றது. அந்த முன்றலில் பிரார்த்தனைகள் இடம் பெறுகின்றன. வகுப்பறைகளிலும் 'வழிபாட்டு மூலை' அமைக்கப்பட்டிருக்கும். அதிலுள்ள படங்களுக்கு மாணவர் மலர் தூவி விளக்கேற்றுவர்.

ஆசிரியர் வகுப்பறைக்கு வரும்பொழுது எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தல் கூட ஒருவகையில் வழிபாடுதான். எழுதும்போது பிள்ளையார் சுழி இடுதல், 'சிவமயம்' என்று எழுதுதல், பாடசாலை நிறைவுபெறும் போது பிரார்த்தனை செய்தல், பாடசாலைக் கீதம் பாடுதல் போன்ற செயற்பாடுகளும் எமது சமயம் சார்ந்த விழுமியங்களுக்கு அடிப்படையாகின்றது.

மேலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு அமைவாக அருகிலுள்ள ஆலயங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று பூசை வழிபாடுகளில் பங்கு கொள்ளச் செய்தல், தலயாத்திரைகளுக்காகக் களப்பயணம் மேற்கொள்ளுதல் என்பனவும் சமயம் சார்ந்த நடைமுறைகளாகும். இவற்றைவிட பாடசாலைகளில் சமய விழாக்களை நடாத்துவது முக்கியமான நடைமுறையாகும்.

சிவராத்திரி விழா நாயன்மார் குருபூசைத் தினம்
நவராத்திரி விழா

என்பவற்றைப் பாடசாலைகளில் நிகழ்த்தல் அதன்போது மேற்கொள்ளப்படுகின்ற வழிபாடுகள், அனுட்டானங்கள் என்பவை முக்கியம் பெறுகின்றன. இவற்றின் மூலம் மாணவரிடையே இறையுணர்வு, கூட்டுப்பொறுப்பு, தலைமைத்துவம் என்பன ஏற்படுகின்றது. அத்துடன்,

1.பேச்சுப் போட்டி 3.மாலை கட்டுதல்
2.கோலம் போடுதல் 4.சமய அறிவுப் போட்டிகள்

என்பன நடாத்தப்படுகின்றன. இவற்றில் மாணவர்கள் சமய வரலாறுகளைத் தெரிந்து கொள்வதுடன் அழகியல் சார்ந்த திறன்களையும் வளர்த்துக் கொள்ள முடிகின்றது. நாயன்மார்கள் மற்றும் சமயப் பெரியார்களின் குருபூசைத் தினங்களைக் கொண்டாடுவதன் மூலம் சமயப்பெரியார்களின் செயற்கரிய செயல்களை அறிந்துகொள்வதுடன் அவர்களைப் பின்பற்றி நடந்துகொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

## (இ). கோயிலும் சமயமும்

கோயில் என்பது இறைவன் குடியிருக்கும் இடம் என்பது மட்டுமல்ல எமது பண்பாடுகள் வளர்க்கப்படுகின்ற இடமாகவும் கருதப்படுகின்றது. இறையன்பை வளர்ப்பதற்கும் எமது அன்றாடக் கடமைகள் சிறப்பதற்கும் ஆலயவழிபாடு உதவுகின்றது. அதனால் தான் எமது ஆன்றோர் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனக் குறிப்பிட்டனர். மேலும்

- ★ கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்
- ★ கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்
- ★ ஆலயம் இல்லாத ஊர் அடவிகாடே

ஆகிய முதுமொழிகளும் எமது வாழ்வில் திருக்கோயில் வழிபாட்டின் அவசியத்தை உணர்த்துகின்றது. ''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா...'' என்ற தேவாரப் பாடலில் அப்பர் சுவாமிகள் இறைதொண்டின் சிறப்புகளை விளக்குகின்றார். இந்த வகையில் எமது ஆன்மீக வாழ்வில், அதிக அளவிலான ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகள் ஆலயங்களிலேயே நடைபெறுகின்றன.

- ★ நித்திய பூசை
- ★ நைமித்திய பூசை
- ★ தலயாத்திரை - தீர்த்தயாத்திரை

ஆகிய கருமங்கள் ஆலயங்களில் முறைப்படி நடைபெறுவதனால் ஆலயங்கள் ஒரு சமூகமயப்பட்ட நிலையங்களாக மாறிவிடுகின்றன. இங்கு நடைபெறுகின்ற பூசைகள், விழாக்கள், கலைகள் என்பன மனதினைப் பண்படுத்துவதாகவும் படிப்படியாக எம்மை வீடுபேற்றிற்கு இட்டுச் செல்லுவதாகவும் அமைகின்றது.

## பயிற்சிகள்

01. இறைநம்பிக்கை மூலம் எவற்றினைக் கட்டியெழுப்பலாம்?

02. இறைசிந்தனையுடன் வாழ்வியற் கருமங்களை ஆற்றுவதற்கு ஏற்ற இடங்கள் எவை?

03. விழுமியம் என்றால் என்ன?

04. நாம் பேணுகின்ற, பேணவேண்டிய மனித விழுமியங்கள் எவை?

05. விழாக்கள் கொண்டாடுவதனால் ஏற்படும் நன்மைகள் எவை?

06. பாடசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற சமயம் சார்ந்த விழுமியங்கள் எவை?

07. நித்திய - நைமித்திய பூசை என்றால் என்ன?

## செயற்பாடு

★ மனித விழுமியங்களைப் பட்டியற்படுத்தி, அவற்றினைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகளையும் குறிப்பிடுக.

## பாடச்சுருக்கம்

★ ஒழுங்குபடுத்தப்பட்ட நெறிக்கூடாக மனிதனைச் சிறந்த வாழ்க்கை முறைக்கு வழிப்படுத்துவது சமயமாகும்.

★ இறைசிந்தையுடன் வாழ்வியற்கருமங்களை ஆற்றும் இடங்களாக வீடு, ஆலயம், பாடசாலை என்பன சிறப்பாக உள்ளன.

★ இந்துப் பாரம்பரியத்தில் வாழ்வியற்சடங்குகள் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன.

★ சமயக்கடமைகளை ஆற்றும்பொழுது, பல்வேறு மனித விழுமியங்கள் பேணப்படுகின்றன.

★ சமயம், சமூகம் சார்ந்த எமது பண்பாட்டைப் பிரதிபலிக்கும் நிகழ்வுகள் விரதங்கள், சடங்குகள், பண்டிகைகள் என்பவைகளாகும்.

★ பாடசாலையில் நடைபெறும் அன்றாட செயல்களிலும், ஆன்மீகத்திற்கு உட்பட்டவை அதிகம் காணப்படுகின்றன.

★ ஆலய வழிபாட்டில் நித்திய - நைமித்திய பூசை, தலயாத்திரை முக்கியம் பெறுகின்றன.